விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 1 ஜ- ஆகி 21 இதழ் 32
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-3-1985

## திருமலையில் சர்வதேச விமானநிலையம், சுதந்திர வர்த்தகவலயம்!

(இ. கந்தசாமி)

திருகோணமலை மாவட்டத்தில் புதிய சர்வதேச விமான நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தை அமைப்பதற்கான பாரிய திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பை அமெரிக்க 'போயிங்' விமான நிறுவனத்திடம் ஒப்படைக்க அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

இது சம்பந்தமாக ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலேயே அமைச்சரவை இதனை அங்கீகரித்துள்ளதெனவும், இதற்கு 2 லட்சத்து 92 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவிடப் பட்வுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் பிரதான விமான நிலையத்திலிருந்து விமானங்களை வேறுஒருமாற்று விமான நிலையத்துக்கு திருப்பி விடுவதற்காக இவ்வாறான விமான நிலையம் அத்தியாவசியமானதென்று ஜனாதிபதி

(6ம் பக்கம் பார்க்க)

## மாஸ்கோவில் பல உலகத் தலைவர்கள் தனித்தனியே சந்திப்பு

## இலங்கைப் பிரச்னை குறித்து ரஜீவ் விளக்கினார்!

[மாஸ்கோ]

காலஞ்சென்ற சோவியத் அதிபர் ஷெனன்கோவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக மாஸ்கோ வந்திருந்த இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி, அங்கு கூடியிருந்த பல உலகத் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சை இந்தியத் தூதரகத்தில் சந்தித்த திரு ரஜீவ் காந்தி இலங்கைப் பிரச்னை குறித்து நீண்ட நேரம்விவாதித்ததாக இந்தியத்தூதரகஅதிகாரி ஒருவர்தெரிவித்தார். இலங்கைப்பிரச்னைக்குஅரசியல்தீர்வுகாணவேண்டியதன்அவசியத்தை இருவரும் வலியுறுத்தியதாகவும் அவர்தெரிவித்தார்

திரு. ரஜீவ்காந்தி பின்னர் சோவியத் அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ள சோபர்சேயைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். பல்வேறு நாட்டுத்தலைவர்களையும் அவர் தனித்தனியே சந்தித்துப் பேசினார். திரு காந்தி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரையும் நேற்று இரவு சந்திக்க இருந்தார்

இதேவேளை மறைந்த சோவியத் அதிபரின் இறுதிக்கிரியைகள் நேற்று செஞ்சதுக்கத்தில் நடைபெற்றது.

# மதவாச்சி பொலிஸ்நிலையம்மீது தாக்குதல், ரயில்நிலையம்சேதம்!

## படையினர் முறியடித்தனர்

## உயிர்ச்சேதமில்லை என்கிறது அரசு

(கொழும்பு)

மதவாச்சி பொலிஸ் நிலையத்தின்மீது தீவிரவாதிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியபோது கட்டிடத்தின் ஒருபகுதி சேதமடைந்ததாகவும், பாதுகாப்புப்படையினர் திருப்பித் தாக்கியதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் தப்பிஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு லொறிகளில் வந்த இத்தீவிரவாதிகள்குழு பொலிஸ் நிலையத்தை தாக்கிவிட்டு செல்லும்போது மதவாச்சி ரயில் நிலையத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தனர். இதனால் ரயில் நிலயக் கட்டிடம் (துணிக்கை).

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கை குற்றச்சாட்டுக்கு இந்தியா மறுப்பு!

(ஜெனிவா)

இலங்கையிலிருந்து தமிழகம் வந்திருக்கும் அகதிகளின் எண்ணிக்கையை இந்திய அரசு மிகைப்படுத்திக் கூறியிருப்பதாக இலங்கை தெரிவித்த குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனிதஉரிமைகள் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதி

[6ம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர் மீது ஹெலிகொப்டர் தாக்குதல்!

(சென்னை)

ராமேஸ்வரம் கடல் பிரதேசத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பதினொரு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டார்கள்

இந்திய மீனவர்கள் படகுகளில் இருந்த பதினொருகிலோ இறாலையும் இலங்கை கடற்படையினர் பறித்துச்சென்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கியால்சுடப்பட்டதாகவும், ஆயினும் இந்திய மீனவர்கள் தப்பிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அ'புரம்வரை ரயில் சேவை

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து கிளிநொச்சிவரையும் நடைபெற்று வந்த ரயில் சேவை நேற்றுத் திடீரென அனுராதபுரம்வரையுமே நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ம் பக்கம் பார்க்க)

## பஸ்கட்டணம் உயரும்?

(கொழும்பு)

பஸ் கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

தனியார் - போக்குவரத்துச் சபை கூட்டுபஸ்சேவைகுறித்து

(6 -ம் பக்கம் பார்க்க)

## "எங்களிலும் தமிழ் ரத்தமே"

— இ. காங்கிரஸ் உறுப்பினர்

## அனைவரும் கூடிப்பேசுவோம்

—தி. மு. க. உறுப்பினர்

(சென்னை)

''ஈழத் தமிழ்மக்கள் உடலில் ஓடும் அதே தமிழ் இரத்தந்தான் எங்கள் உடலிலும் ஓடுகிறது'' என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. கதிர்வேல் உணர்ச்சிப்பிரவாகம் மேலிட நேற்றைய சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

''இலங்கைத்தமிழர் பிரச்னையில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த எவரும் மாற்றுக் கருத்தை உடையவர்கள் அல்ல'' என்றும் அவர் தெரிவித்தார்.

''இலங்கைப்பிரச்னை பற்றி கட்சிவேறுபாட்டின்றிக் கலந்துபேசி, ஒருமுகமான கருத்தை தமிழ்நாடு சட்டசபைமூலம் இந்திய மத்திய அரசுக்கு தெரிவிக்கவேண்டும்'' என்று தி. மு. க. உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் கூறினார். (ரா)

## 4 இளைஞர்கள் விசாரணையில்!

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் 4 இளைஞர்களைக் கைது செய்த ஆயுதப் படையினர் அவர்களிடமிருந்து ரைப்றைற்றர், றேனியோ யந்திரம் என்பவற்றை மீட்டுள்ளனர்,

## இந்தியா வரவேற்பதால்தான் அகதிகள் வருகிறார்கள்——

## 'தொண்டா' கூற்றுக்கு 'அமிர்' அதிர்ச்சி!

(சென்னை)

இந்தியா அகதிகளை வரவேற்பதால்தான் தமிழ் அகதிகள் பெருமளவில் இந்தியா வருவதாக அமைச்சர் தொண்டமான் தமிழகத்தில் தெரிவித்த கருத்து குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்களைச்சந்தித்த திரு அமிர்தலிங்கம், அமைச்சர் தொண்டமானின் கருத்து குறித்து மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

''மன்னாரிலும் மற்றைய பகுதிகளிலும் வசதியுடனும் கௌரவத்துடனும் வாழ்ந்து வந்தவர்கள் வீடுகளையும் சொத்துக்களையும் விட்டுவெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

''ஆயிரக்கணக்கான அகதிகளை நான் சந்தித்தேன், அவர்கள் எல்லோரும் தொண்டமா

[6-ம் பக்கம் பார்க்க]

## கலகலப்பின்றி அமைச்சர்

(இ. கந்தசாமி)

அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்தின் பின்னர் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்த ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் கலகலப்பின்றி காணப்பட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

வீட்டுப் பாவனைப் பொருட்களும், தளபாடங்களும் உடனடி விற்பனைக்குண்டு. ஸ்ரனிஸ் லொஸ், 14/1A, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி. 2230

Bairaha Farms Hybro புறொயிலர் குஞ்சுக்கள் 14-ந் திகதி வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2246

Hitachi குளிர்சாதனப் பெட்டி (Refrigerater-Freezer) மொடல் R618M, Akai வீடியோ றெக்கோடர் VS5 5EGN (Triple System) உடன் விற்பனைக்கு உண்டு. 396, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார்கோவிலடி, நல்லூர். 2233

ஓட்டுமடம் ஆலடிச் சந்தியில் 10 பரப்பு வயல் காணியும் நெஷனல் டெக், 2000 சொனி T. V. 20 இஞ்சி, 88 Sri C 90 Honda மோட்டார் சைக்கிள், 1 Office Table விற்பனைக்குண்டு. நியூ குகானந்த கபே, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 2214

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணாடிஇழையாலான குசினி பேசின் (Sink), Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே ட்ரேட் சென்ரர், ஹோம் பினன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1484

தாவடிச் சந்தியிலிருந்து மானிப்பாய்றோட்டில் 500யார் தொலைவில் 100யார் ஒழுங்கை முகப்பாகவும், பாடசாலை ஒழுங்கையுடன் இணைந்ததும் பிரிக்கப்பட்டதுமான 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வரைபடத்தையும் விபரங்களையும் அறியவேண்டிய முகவரிகள்: 257, K. K. S. றோட்டில் அமைந்துள்ள கடை, Proctor நவரெத்தினம், கொக்குவில் மேற்கு, CIEKO தாவடிச் சந்தி. 2148

யாழ். பலாலி றோட் புன்னாலைக்கட்டுவன் அச்செழு நீர்வேலி பஸ் 800 பாதையில் அச்செழு தபால் நிலைய முன்பாக தொழிற்சாலை, பெருந்தோட்டச் செய்கைக்கும் உகந்த தொலைபேசி, மின்சாரம் தொடர்புள்ள காணி விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கலாம். விலை நியாயமாக கேட்கலாம். தொடர்பு: G. மயில்வாகனம். 119, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 2255

ரூபவாகினி, இந்தியா, TV ANTENNAE பைப் கம்பிகளுடன் மற்றும் புதிய ASIA CYCLE ஒன்றும் உடனடி விற்பனைக்குண்டு மா. பராஜசிங்கம், 70/10, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 2261




## விற்பனைக்கு

மானிப்பாய் — தபால் கந்தோர் வீதியில் 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. மேதர், 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2253

நாவற்குழி கேரதீவு றோட்டில் புகையிரத நிலையத்திலிருந்து ½ மைல் தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: Kathir Hardware Stores, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2263

## தேவை

உயர் வேளாளர் குலத்தில், மரக்கறி உணவு மட்டும் புசிக்கும், மது அருந்தல், புகை பிடித்தல் இல்லாத, வெளி நாட்டில் வேலைபார்க்கும் 27 வயது உடைய மணமகனுக்கு சகல சிறப்பு அம்சங்களுமுடைய பெண்பிள்ளை தேவை. சீதனவிபரம், சாதகக்குறிப்பு, புகைப்படப் பிரதிகளுடன் மற்றும் சகல விபரங்களும் அனுப்பி விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2257, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2257

யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அண்மையில் 3 Phase மின்சாரம், நீர் வசதிகளுடன் ஏறத்தாள 50 அடி X 20அடி கட்டிடம் தொழிற்சாலைப் பாவிப்புக்காக மூன்று மாதங்களுக்குத்தேவை. 16-3-85சனிக்கிழமை அல்லது அதற்குமுன் காரியாலய நேரத்தில் முழு விபரங்களுடனும் நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்க. இல 274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [2245]

## தேவை

இறைச்சிக் கோழிகள் (Broilers) தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணு பாம், இணுவில். 2252

## தவறிவிட்டது

சீனியர் அற்புதராஜா நீர்வேலி, இல. 620873713 V என்பவருடைய அடையாள அட்டை 15/11/84ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும். S. அற்புதராஜா, 19, கொலனி, நீர்வேலி. 2250

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் சகல விதமான பொருட்களும் துரித விற்பனையாகும் இடத்தில் கடை குத்தகைக்கு கிடைக்கும். விபரங்களுக்கு நேரில் வரவும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2258

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### கலைப்பீட முதலாம் வருட அடிப்படைக்கணித
### மீள் பரீட்சை

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சைக்கிளையில் பெற்று பூர்த்தி செய்து 31/03/1985க்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் படிவங்கள் நிராகரிக்கப்படும். கட்டணங்கள் காசுக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும்.

சிரேஷ்ட உதவிப்பதிவாளர்
பரீட்சைக்கிளை.

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
11/03/1985

2262

# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, ஒல்லாந்து செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி, செல்வதற்கான சிறந்த வசதிகளும்,

குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

செவ்வாய் முதல் வெள்ளி வரை
PRASAD REST,
11 - Upatissa Road,
BAMBALAPITIYA. PHONE: 587855

சனி, ஞாயிறு, திங்கள்
வ. நல்லையா,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[2215]

# தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள
பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
தமிழ் தட்டெழுத்தாளர் ஒருவர் உடனடியாகத் தேவை.

தமிழ், ஆங்கிலம், கணிதம், தமிழ் தட்டெழுத்து
ஆகியவற்றில் திறமைச் சித்திகளுடன்
(இரு தடவைகளுக்கு மேற்படாமல்)
ஆறு பாடங்களில் சித்தியும்,
தமிழில் நிமிஷத்திற்கு 20 சொற்கள் வீதம் அடிக்கும்
திறமையும் இருத்தல் வேண்டும்.
தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தலும், ஆங்கிலத்தில்
நிமிடத்திற்கு 30 சொற்கள் அடிக்கக்கூடியவர்களுக்கும்
முன்னுரிமை வழங்கப்படும்.
வயது 18 — 25ற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.
விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 20-3-85க்கு முன்

விளம்பர இல. 60,
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்
என்னும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(2242)

# தமிழ்நாடு சட்டசபை ரஷ்யத் தலைவருக்கு அஞ்சலி

[சென்னை]

சோவியத் ஜனாதிபதி கொன்ஸ்ரன்ரின் செர்னென்கோவின் மறைவுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று அஞ்சலி செலுத்தியது.

மறைந்த சோவியத் தலைவரின் நினைவாக இரங்கல் தீர்மானம் ஒன்று சபையில் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் ''மறைந்த தலைவர் மாணவர் பருவம் முதல் இறுதி வரை கம்யூனிஸத்தின் வளர்ச்சிக்கு உழைத்ததோடு, திறப்பட ஆட்சி செலுத்தியவர்'' என்று குறிப்பிட்டார். சபாநாயகர் திரு. பி. எஸ். பாண்டியன் பேசுகையில், ''இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்த தலைவர்'' என்று குறிப்பிட்டார்.

சகல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசினர். பின்னர் செர்னென்கோ மறைவுக்கு 2 நிமிட மௌன அஞ்சலியும் 10 நிமிடம் சபையும் ஒத்திவைக்கப்பட்டது.

## 120-ம் நாள் நினைவு அஞ்சலி

மண்: 1940-03-14 விண்: 1984-11-14



**அமரர் வி. சிங்காரவேலு**
(உதவி அரசாங்க அதிபர், தலைமைப்பீடம்,
கச்சேரி, முல்லைத்தீவு)

நீரில் மூழ்கி நினைப்பொழிக்கும் இவ்வுலகில்,
பாரியிலும், மாரியிலும், மேலோனாய் — முல்லை
மண் சிறக்க முத்தமிட்காய்வு செய்த சிங்காரன்
பண் பாளன், மக்கள் மனம் நின்றான்; விண் பூந்து.
அமரர் தம் ஈமக்கிரியைப் பொழுதும்,
அந்தியேஷ்டிக் கிரியைப் பொழுதும்;
வந்து; நொந்த எம்மனம் ஆற
தந்த வார்த்தை: ஆதரவனைத்துடன்
தந்தி தபாலால் தண் நிழல் செய்தும்
வங்கி மூலம் வளமுற விதைத்த
தங்க மனங்களுக்கு நன்றி! நன்றி!
தந்தோம்; தருவோம்; தயவுடன் ஏற்க.

அன்னாரின் குடும்பத்தினர்,
கரைச்சிக் குடிஇருப்பு, முல்லைத்தீவு.

1984-03-14. (2254)

## 43-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
29-1-1941

மறைவு:
30-1-1985



**திருநாவுக்கரசு மகேந்திரன்**
(பட்டதாரி ஆசிரியர்,
வட்டக்கண்டல் மகாவித்தியாலயம், மன்னார்)

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடராய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், மாணவர்களினதும் சக ஆசிரியர்களினதும் அன்பையும், நன்மதிப்பையும் பெற்ற ஆசிரியராய் துலங்கி அகால மரணமெய்தினீர். உமது பூதவுடலைக்கூட காண முடியாமலும் உமக்கு நாங்கள் இறுதிக்கிரியைகள் செய்ய முடியாமலும் பாவிகளானோம்.

உமது பிரிவால் என்றும் துயருறும்
பெற்றோர் - திரு-திருமதி திருநாவுக்கரசு,
அன்பு மனைவி - யோகசவுந்தரி, மகள்- தர்சினி,
சகோதரர்கள்- புவனேந்திரன், திருஞானசம்பந்தர்,
தெய்வேந்திரன், சந்திரவதனி, மீனலோஜினி,
புலேந்திரன் (ஜேர்மனி), பத்மலோஜினி (ஜேர்மனி),
கமலலோஜினி (ஜேர்மனி),
மைத்துனர்கள்- கயிலையங்கிரி (ஜேர்மனி). கஜேந்திரன் (ஜேர்மனி), செல்வராஜா (ஜேர்மனி). மோகன் (ஜேர்மனி),
மைத்துனிகள், மருமக்கள், பெருமக்கள்
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

க. சந்திரவதனி,
ஊரெழு மேற்கு.

[2260]

**மணிவாக்கு**

அனைத்தையும் துறந்தயோகி, போர்க்களத்தில் போராடி உயிர்துறந்த வீரன் ஆகிய இருவரும் சூரிய மண்டலத்தைப் பிளந்துகொண்டு அதே ஆன்மிகப் பேரின்பத்தை அடைகின்றனர்.

— ஒரு சுலோகம்

# நமதுநோக்கு

## ஐந்துவருடவளைகுடாயுத்தமும் யாழ்.குடா போரும்

ஈரான்-ஈராக் யுத்தம் ஆரம்பமான காலத்தில் எழுதியதலையங்கம் இன்றும் நினைவில் பசுமையாக இருக்கின்றது. எழுதிமுடிந்ததும் யாழ் நகரில்நிலைமைசீரில்லை என்ற காரணத்தால் குறுக்கு றேட்டால் காரில் சென்ற அனுபவம் அந்த பசுமையான நினைவுக்குக் காரணம்

யாழ். நகரில் மட்டுமல்ல யாழ். மாநிலத்திலேயே நிலைமை இன்றும் சீரில்லை; நகரில் சுமார் ஒரு மைல் தூரம் காரில் செல்வது இன்று சாரதிக்கொரு நுண்கலையாகவே இருந்து வருகிறது.

இந்த நிலைமையில் வளைகுடா யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் செய்தி அண்ணன் தம்பி அடிபிடி எத்திசை நோக்கிச் செல்கின்றதென்பதைச் சுட்டுகிறது.

ஈரானும் ஈராக்கும் அண்ணனும் தம்பியும்; சடுதியில் மூண்டபோர் சிலநாட்களில் முடியுமென்ற நம்பிக்கை தொடக்கத்தில் இருந்தது. விட்டு விட்டுப் பெய்யும் மழை போல் தொடர்ந்த போர் இன்றுஒரு பெருயுத்தமாகப் பலத்துவிட்டது.

வளைகுடாவில் போக்குவரத்துச் செய்யும் கப்பல்கள் தாக்கப்பட்டது ஈராக் புரிந்த அதிசய செயலென்று தன்னையே பாராட்டிக்கொண்டது: ஈரான் சும்மாவிருக்கவில்லை, தனது பதிலடி பாரதூரமானது என்று பேரம்பேசிக்கொண்டது

இந்த நீண்ட காலத்தில் சமாதானம் பேச முயன்றவர் ஒருவர் இருவரல்ல. சவூதி அரேபியா, குவைத், அல்ஜீரியா, சிரியா போன்ற அண்டை நாடுகள் நட்புநாடுகள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. காரணம் இரு நாடுகளின் தலைவர்கள் இன்றும் பிடிவாதம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அரபுநாடுகளை அமெரிக்கமயமாக்க வேண்டாமென்று ஈரான் சவூதிக்கு எச்சரிக்கை விடுகின்றது. அதிபர் ஹுஸெயின் ஆட்சியிலிருந்து விலக வேண்டுமென்றும் யுத்தத்தால் ஏற்பட்ட சேதத்திற்கு ட்ட ஈடு கொடுக்கவேண்டுமென்பதும் ஈரானின் விதண்டாவாதம்.

வளைகுடா ஐக்கிய நாடுகள் (G.C.C) இதற்கு வேண்டிய சமாதானத் திட்டம் உருவாக்கிய போதும் ஈரானோ ஈராக்கோ தாம் பிடித்த முயலுக்கு நான்கு காலைக் காண முடியவில்லை.

அண்ணன்தம்பி போராட்டம் ஒருவித தொற்று நோய் என்று நினைக்க இடமுண்டு.

வளைகுடா யுத்தம் ஒரு பெருப யுத்தமாய்விட்டது. நாம் குறிப்பிடும் யாழ்குடா போர்-அதுவும் அண்ணன் தம்பி அடிபிடி; ஐந்து வருடம் தானு அதன் வயதென்று தெளிவாகச் சொல்ல முடியாது ஒருதலைக் காதல் போல இது ஒருதலைப் போராகவே ஆரம்பித்தது.

இதற்கு இனக்கலவரம் என்ற பெயர் சூட்டப்பட்டது. சுமார் 27 வருடத்துக்குமுன் ஆரம்பமானது. ஒருபக்கம் தாக்குவது மற்றது தாக்கப்படுவது; அண்மையில் இது போராக மாறிய நிலையில் வளைகுடாவைக் குட்டி முந்த எத்தனித்தது

இலங்கை ராணுவப் படையினரை தமிழ்போராளிகள் தாக்கி வெற்றியும் கண்டனர் இலங்கை ராணுவம் எவ்வித கட்டுப்பாடுமின்றி, ஈன இரக்கமின்றி அப்பாவி மக்களைச் சுட்டுத் தள்ளி சர்வதேச கண்டனத்துக்கு உள்ளானது.

இது வளைகுடா யுத்தத்துக்குமே ஒருபுதுத்திருப்பம் கொடுத்திருப்பது போல் தெரிகிறது.

இலங்கையில் நடைபெறுவது ஒரு போர் என்று கொள்ளாவிட்டாலும், ஜெனிவா மனித உரிமைக் குழு குறிப்பிட்டது போல், ராணுவநடவடிக்கை என்ற பெயரில் கண்மூடித்தனமாக அப்பாவித் தமிழ மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

இது தான் இன்று ஈராக் ஈரானில் நடத்தும் புதிய போர்முறை. 2500 பொது மக்கள் கொல்லப்பட்ட செய்தி இதனை அனுபவித்த எங்களையே நடுங்க வைக்கின்றது.

ஈராக், ஈரான், இலங்கை இம் மூன்றும் பழமை வாய்ந்த நாகரிக மேன்மை பெற்ற நாடுகள். இவற்றுள் ''தன்னைத் தான் வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவனை விட மேலானவன்'' என்று மொழிந்த புத்தபிரானின் ஆசி பெற்றநாடு இலங்கை.

ஐந்து வருட முடிவிலாவது ஆண்டவன் ஆட்சியாளரின் கண்ணைத்திறக்க வைத்து ஒருகுடும்பத்து மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று குவிக்காது தடுத்து அருள் புரிவாராக

# உலக சரித்திரத்தை மாற்றிய

## பொதுவுடமைத் தந்தை கார்ல்மாக்ஸ்

''உழைக்கும் வர்க்கமே ஒன்றுசேருங்கள்'' என்று கோஷம் எழுப்பிப் பாட்டாளி மக்களின் தலைவனுய் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புரட்சிக் கரங்களை முன்தூக்கிச் சென்றவரில் முதன்மையானவர் கார்ல் மார்க்ஸ்

உழைத்தவனுக்கு உண்ண உணவில்லை, இருக்கநிலமில்லை ஆண்டான் அடிமை சமுதாய வேறுபாட்டால் ஆண்டாண்டு காலமாய் அடிமைச் சகதியில் அமிழ்ந்து சுரண்டல் ராஜ்யத்தினுலான ஏகாதிபத்தியத்தின் ஏவலைத் தாங்கி தினம் தினம் அல்லற்பட்டு உதிரத்தை உரமாக்கி, உடல் தேய்ந்து ஓடாகி, உரிமைகளை இழந்து நின்ற பாட்டாளி வர்க்கத்தின விடுதலைக்காகப் போராடியவர் கார்ல் மார்க்ஸ்.

''சமுதாயத்தின் கடந்தகால வரலாறுபூராவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே ஆகும்'' எனத் தொடங்கும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதல் அத்தியாயமே கார்ல் மார்க்ஸின் கொள்கைக்கான விளக்கமாக விளங்குகின்றது.

''முதலாளித்துவத்தின் பொருளாதாரப் பலம் அதிகரிக்கும்போது அவர்கள் எண்ணிக்கையில்குறைந்துகொண்டு போகின்றார்கள். அப்படி அவர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டு போகும் வேளையில் தொழிலாளர் வர்க்கத்தை நசுக்கவென அவர்கள் மென்மேலும் முயற்சியை மேற்கொள்வர். இந்த ஒடுக்கல் முயற்சியினுல் தொழிலாளர் வர்க்கமானது தங்களுடைய வாழ்க்கையின் பொதுவான தன்மையினை உணர்ந்து எல்லோரும் ஒருங்கிணைந்து, முதலாளித்துவம் தன்னை வளர்த்துக்கொள்ளவெனக் கைக்கொள்ளும் முயற்சிகளையும் செயல்முறைகளையும் தடுத்துத் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். இதன் விளைவாக முதலாளித்துவ அமைப்புடன் முட்டிமோதி அவற்றைத் தகர்த்தெறிந்து தொழிலாளர் வர்க்கத்தின் தேவைகளையும் விளைவுகளையும் பூர்த்திசெய்யும்

— கஜன் —

படியான அமைப்பு ஒன்றினையும் காண்பார்கள். இந்த அமைப்பு சர்வதேச தன்மை கொண்டதாக இருக்கும்'' என்று அந்த அறிக்கை சரித்திரத்தை விமர்சனம் செய்கின்றது

பொருளாதாரவிதிகளைப் புதியதோர் கண்ணோட்டத்துடன் பார்த்து, விளக்கி சிந்தனையாலும் அரசியல் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வர்க்கப் போராட்டத்திற்கு ஒரு வடிவத்தைக் கொடுத்து, கம்யூனிஸ சமுதாயமொன்று உருவாகும்போது அரசாங்கமே தேவயில்லாதவொரு சூழ்நிலை உருவாகுமென இந்தநூலின் மூலம் கார்ல் மார்க்ஸ் கணிப்புச் செய்தார். இவரது சிந்தனைகளே ரஷ்யாவிலும், சீனுவிலும் புரட்சியை ஏற்படுத்த ஏதுவாக அமைந்தன.

இவர் அரசியலுடன் தன்னுடைய சிந்தனைக்கு எல்லை போட்டுவிடவில்லை. மெய்யியல், பொருளியல், கணிதவியல் போன்ற பலதுறைகளில் அறிவின் கூர்மையை ஆழமாகப்பாய்ச்சியும்மார்க்ஸிசத்தை வேரூன்றவைத்தார்.

பாட்டாளி வர்க்கத்தின் துயர்

(5ம் பக்கம் பார்க்க)

# உலக மக்களின் மதிப்பைப் பெற்ற சோவியத் தலைவர்

காலம் சென்ற சோவியத் அதிபர் திரு கொன்ஸ்தாந்தின் உஸ்தினேவிச் செர்னன்கோ, கிரஸ்னேயார்ஸ்க் பிரதேசத்திலுள்ள நொயாஸ்கில் 1911 செப்ரெம்பர் 24-ம் திகதி பிறந்தார். கொன்ஸ்தாந்தின் செரன்கோ சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியினதும், சோவியத அரசினதும் புகழ்பூத்த தலைவர்களில் ஒருவரா வர். இவர் தமது இளம் வயதில் செல்வந்த விவசாயிகளின் பண்ணைகளில் சாதாரண கூலியாக வேலைசெய்தார்

1931-ம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினரானூர். அதற்குமுன் கொம்சமாலுடனும் கட்சி செயல்பாடுகளுடனும் இறுக்கமாக பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தார் இவர் ஆசிரியராகவும் சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய கமிட்டியின் கட்சிஅமைப்பாளர்களுக்கான உயர்கல்லூரியில் பயிற்றப்பட்டவர்.

1948-ல் மொல்தாவியன் சோவியத் சோசலிசக்குடியரசில் பிரசார எழுச்சிப் பிரிவில் தலைவராகக் கடமையாற்றினூர் இக்காலகட்டத்தில் தனது வலிமை, அறிவு அனுபவம் யாவற்றையும் ஒன்று திரட்டி இக்குடியரசின் பொருளாதார கலாசார நிர்மாணத்திற்காகவும் உழைக்கும் மக்களுக்கு கம்யூனிச கல்வி அறிவி ஊட்டுவதற்க்காகவும் பாடுபட்டார். பினராகக் தெரிவு செய்யப்பட்டார். 1984 பெப்ரவரி மாதம் 13-ம் திகதி செர்னன்கோ சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பொதுச்செயலா

— எஸ் விஜயானந்தன் —

1971-ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு 1976-ல் மத்திய கமிட்டியின் செயளாராக தெரிவு செய்யப்பட்டார். 1978-ல் அரசியல் குழு உறுப்ளரே ஜனுதிபதியாகவும் செயல்படுவர். அதற்கமைய இவர் சோவியத் அரசின் சக்தி மிக்கதலைவரானூர்.

கடந்த 10-ம் திகதி இவர் இயற்கை எய்தும் வரை சில

[5ம் பக்கம் பார்க்க]

## தவக்காலத்தின்



## 23-ம் நாள்

''தனக்கு எதிராகப் பிரியும் எந்த அரசும் பாழுவப்போம்; வீடுகளும் ஒன்றன்மேல் ஒன்றாய் விழுந்தழியும். பெயர் செபூலைக் கொன்றுநான் பேய் ஓட்டுகிறேன்என்று சொல்லுகிறீர்களே; தனக்கு எதிராகத் தானே பிரியும் சாத்தானின் அரசு எப்படி நிலைக்கும்?''

லூக், 11-17-18

மனிதனுக்கு மனிதன் எதிரியாகக் காணப்படுவதனுல் தான் இன்று மனிதன் பலபிரச்னைகளுக்கு ஆளாகியுள்ளான் பிளவுகளினதும், பிரிவினைகளினதும் சின்னமாகத் தற்கால மனிதன் காணப்படுகிறான்

இதனுல் எங்கும் அழிவுகளும் அமைதியினமும மலிந்து காணப்படுகின்றன. எனவே இந்த இருநிலையிலிருந்து விடுதலை பெற மனிதன் மனிதனை மதித்துவாழவேண்டும். சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சமாதானப் போன்ற நற்பண்பாடுகள் வளருவதற்கு ஏற்றதாய் மனிதமனம் மாற்றம் பெறல் வேண்டும்.

வண. வின்சென்ற் பற்றிக்] அ. ம. தி.

## அந்தத் தலையங்கம்

5-3-85 திகதிய ஈழநாடு' ''நமது நோக்கு'' சிறப்பாக இருந்தது எனினும் முடிவில் தாங்கள் தெரிவித்திருந்த ''இன்றைய அழிவு நிலைக்கு சிங்கள ஆட்சியும் மக்களுமே காரணம்'' என்னும் கருத்து முற்ருக ஏற்கக்கூடியதல்ல. காரணம் 'அதிகாரப்பரவலை' 100 வீதம் யாம் (L. S. S. P.)

# மக்கள் கருத்து

ஆதரிக்கிறோம் ஆனுல் அதிகாரத்தைப் பங்கிடுசலையல்ல என்று என் எம். கூறியதையும் நீங்கள் சமகால அரசு ஒன்றை நடாத்த முனைகிறீர்கள். என்றும் சமஷ்டிவாதிகளுக்கு 'மோதிரக்கைக் குட்டு N M. பெரேராவினுற் கிடைத்ததைத் தமிழ் புத்திஜீவிகளும், ஈழநடு ஆசிரியர் குழாமும் அறிந்திருந்தால் மேற்படி ஈழநாடு ''ஆசிரியர் எண்ணம்'' ஜனித்திருக்காது,

நேற்றுவரை தமிழ்புத்திஜீவிகளும், மற்றேரும் அறியா

[5ம் பக்கம் பார்க்க]

## மூன்று சம்பவங்கள்

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தல் நடைபெற்ற மூன்றுசம்பவங்கள் தமிழ் சைவ [அ] மக்களை உலுக்கிவிட்டது. துர்க்கைஅம்மன்கோவில்உடைத்துக் களவாடப்பட்டது (ஆ) யாழ்ப்பாணத்தில் 'யாத்திரிகர் நிலையம்' நிறுவஒதுக்க பட்டிருந்தவில்லூன்றிப் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான காணி அத்துமீறிக் கைப்பற்றப்பட்ட து, [இ] இளங்கலைஞர் பன்றக்கட்டடம் அமையவிருந்த நல்லூர் கொன்றலடிவயிரவர்கோவிற்காணியில் அத்துமீறிக்குடியேற்றம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திற்கு தமிழகத்திலிருந்தும், வெளிமாவட்டங்களிலிருந்தும் வருகைதருபவர்கள் தங்கிச்செல்ல,கொழும்பிலுள்ள இராமகிருஷ்ண மிஷன மடம்போன்றவொரு வசதியான யாத்திரிகர் நிலையம் இல்லாதது பெரும்குறை. இப்படியானஒரு நிலையம் கட்டுவதற்கு சமய சமூகப் பெரியார்கள் பலர் முயற்சி எடுத்தும் இது கட்டுவதற்கு கநதநிலம் யாழ் நகரில் பெற முடியாதிருந்தது இறுதியில் வில்லூன்றிப் பிளளையார் கோவில் தர்மகர்த்தா கோவிலுக்கு முன்னுல் உள்ள மூன்று

(5-ம் பக்கம் பார்க்க)

### ஐ. நா. கோட்பாடுகள் மீறப்படுகிறது

# ஈரான், ஈராக் தொடர்ந்தும் குடிமக்கள் பகுதிகளில் தாக்குதல்!

[லண்டன்]

ஈரானும், ஈராக்கும் குடிமக்கள் வாழும்பகுதிகளில் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இரு நாடுகளும் கொள்கையளவில் இணங்கியுள்ளபோதிலும் எவரும் இதுவரை தாக்குதல் நடவடிக்கையைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

ஈராக்கிய போர் விமானங்கள் ஈரானின் ஐந்து குடியிருப்புப் பகுதிகளைத் தாக்கியதாகவும், இத்தாக்குதல்களின் போது ஈராக்கிய விமானங்கள் ராக்கெட்டுகளை வீசி பல வீடுகளைச் சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க வளைகுடாப் போரில் இந்த ஆண்டு நடத்தப்பட்ட தனது முதலாவது தரைத் தாக்குதல்களில் ஈராக்கின் கவச அணிகளை நாசமாக்கப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் போர் முனையின் தெற்கு அரங்கில் பன்னிரண்டு ஈராக்கிய டாங்கிகளைக் கைப்பற்றியுள்ளதாகவும், சில அதிகாரிகள் உட்பட 40 போர்க் கைதிகளையும்தான் பிடித்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

மேற்கூறிய ஈரானியதரைத் தாக்குதல்களை ஈராக் முறியடித்துவிட்டதாகவும் பக்தாத்திலிருந்து வெளியான போர் அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. [து]

## பஜனைப் பயிற்சி

(வண்ணார்பண்ணை)

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் விசேட பஜனைப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

நல்லை ஆதீன சுவாமியின் ஆதரவுடன் நடைபெறவிருக்கும் இந்தப் பஜனைப் பயிற்சியை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடத்துகின்றது.

## நேற்று முன்தினம் 149 இலங்கை அகதிகள்

[சென்னை]

இலங்கைத் தமிழ் அகதிகள் 149 பேர் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் கரையை அடைந்துள்ளனர்.

## மானி. இந்து உபஅதிபர்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் புதிய உபஅதிபராக திரு. எஸ் இராமதிலகம் கல்விப்பகுதியினரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்முன்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் உபஅதிபராக பல ஆண்டுகள் பதவிவகித்துள்ளார். இவர் இதே பாடசாலையின் பழையமாணவர்.

## உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மாதகலிலுள்ள பாணுவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 3-ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

# முல்லைத்தீவு பிரஜைகள் குழு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரஜைகள்குழுவின் பொதுச்சபைக் கூட்டம் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் வைத்தியகலாநிதி ரி. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் முல்லைத்தீவு பிரஜைகள் குழுவிற்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- பொஸ்கோ மதுரநாயகம் மரியாம்பிள்ளை, செயலாளர்:- எம். ஆசீர்வாதம், பொருளாளர்:- இ. விக்னராஜா. உப-தலைவர்கள்;- பொ. சந்திரசேகரி, சே தம்பாப்பிள்ளை, நிர்வாகசபை உறுப்பினர்கள்: ரி. குணரத்தினம், கே. தியாகராசா, ப, துரைரத்தினம், பக்கீர், வே. கதிரித்தம்பி, கே. யூ. சோமசேகரம், ஆ. வேதநாயகம், பி. அந்தோனிப்பிள்ளை, மு. முத்தையா, க. சிமாம்பிள்ளை, சி. சோமபாலன், கே. ஆறுமுகம், எஸ். யூ. சிவராசா, செ. சண்முகநாதன், ச. முத்தையா.

## பாதுகாப்பு சபையில் அமெரிக்கா ‘வீட்டோ’!

(ஜெனிவா)

தெற்கு லெபனுனில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டுள்ள வன்முறைச் செயல்களுக்கு எதிராக இஸ்ரேலைக் கண்டனம் செய்வதானதீர்மானம்ஒன்றை அமெரிக்கா ஐ நா. சபையில் தனது ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்துள்ளது.

பாதுகாப்பு சபையில் பதினைந்து பேரில் பதிருஞெரு நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. அமெரிக்கா எதிர்த்து வாக்களித்தது. பிரிட்டிஸ், ஆஸ்திரேலியா, டென்மார்க் ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. [து]

## 37 வருட ஆசிரிய சேவையின் பின் ஓய்வு



37 வருட ஆசிரிய சேவைக்குப்பின் ஒய்வுபெறவுள்ள தெல்லிப்பளை வீமன்காமம் மகாவித்தியாலய கனிஷ்ட அதிபர் திரு. கு. கந்தையா சக ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று விளங்கினுர்.

இலக்கணவித்தகர் இ. நமசிவாயம், பண்டிதர் ஸ்ரீ சிவானந்த ஐயர் ஆகியோரிடம் தமிழ்மொழியை முறையாகப் பயின்றஇவர், பின்னர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் சேர்ந்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வழிகாட்டலின்கீழ் அங்கு தமிழ் மொழியை திறம்படக் கற்றுத்தேறினுர்.

ஹட்டன் ஸ்ரீ பாதக்கல்லூரி லிந்துல தமிழ் மகாவித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் ஆசிரியராக இவர் திறம்படப் பணியாற்றினுர். பெற்றூர், ஆசிரியர் சங்கத்தின் இணைச்செயலாளராக இவர் கடமையாற்றி, தெல்லிப்பளை வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக இவர் அயராது உழைத்தார்.

இம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தை புனரமைப்பதில் இவரின் பணி குறிப்பிடத்தக்கது.

தலைசிறந்த பண்பாளராக விளங்கும் இவர் தெல்லிப்பளை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் 27 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி, மூன்று தலைமுறை மாணவர்களை உருவாக்கும் பேறுபெற்றுர்.

நல்லொழுக்கமும், அறிவும் நிறைந்த மாணவர்களை உருவாக்க வேண்டுமென்பதே இவரது இலட்சியமாக இருந்தது கூட்டுறவுத்துறையிலும் அதிக ஈடுபாடுடைய இவர், அதன் வளர்ச்சிக்காகவும் உழைத்தார். இத்தகைய பண்புகளைக் கொண்ட இவர் நாளை வெள்ளிக்கிழமை ஆசிரிய சேவையிலிருந்து ஒய்வுபெறவுள்ளார்.

வ. வயிரவப்பிள்ளை

## சென்னைச் சம்பவம்: 5 இளைஞர் காவலில்!

(சென்னை)

சென்னையில் இம்மாதம் 3ம் திகதி நடைபெற்ற கடத்தல் சம்பவம், இரு தமிழ் இளைஞர் கோஷ்டியினரிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஆகியன தொடர்பாக சென்னையில் கைதுசெய்யப்பட்ட ஐந்து இலங்கைத்தமிழ் இளைஞர்களும் 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

சென்னையிலுள்ள தமிழ்ஈழம் காவல் நிலையத்துக்கு முன்பாக இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும்,ஒருவர் வானில் கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [து]

## மஹாராஷ்டிரா, ஒரிஸாவில் புதிய மந்திரிசபை

(பம்பாய்)

மஹாராஷ்டிராவில் இருபத்தியிரண்டு பேர் கொண்ட மந்திரிசபை பதவியேற்றுக் கொண்டது. இவர்களில் ஏழு பேர் அமைச்சர்களாகவும், பதினைந்துபேர் ஸ்டேட் அமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

முதலமைச்சராக திரு. வசந்தாத பட்டேல் கடந்த ஞாயிறு பதவியேற்றுக்கொண்டார்.

ஒரிஸாவில் பதினைந்து புதிய அமைச்சர்கள் நேற்று மாலை பதவியேற்றுர்கள். புவனேஸ்வராவில் ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பதவிப் பிரமாணம் செய்தனர். அமைச்சரவையில் ஐந்து பேர் மந்திரிகள், பத்துப் பேர் ஸ்டேட் மந்திரிகள், முதலமைச்சர் ஜே. வி. பட்நாயக்க கடந்த ஞாயிறு பதவியேற்றுக் கொண்டனர்.

### ‘ஸாசா’ உலக கிரிக்கெட் போட்டி

## இந்தியக் குழுவுக்கு கபில்தேவ் காப்டன்

[புதுடில்லி]

இம்மாதம் 22-ம் திகதி ‘ஸாசா’வில் நடைபெறவிருக்கும் ‘ரேஸ்பன்’ உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டியில் கலந்துகொள்ளும் இந்தியக்குழுவுக்கு நிகாந் கபில்தேவ் காப்டனுக இருப்பார். ரவி சாஸ்திரி உதவிக் காப்டனுக இருப்பார்,

சுனில் மனேகர் கவாஸ்கர்' கே. சிறிகாந், மொகிந்தர்' அமரநாத், டிலிப்வெண்சாகர், மொகமட் அர்சாரூதீன், எஸ். விஸ்வநாத், ரேயர் பின்னி, எஸ். மதன்லால்,எல் சிவராம கிருஷ்ணன், சேத்தன் சர்மா, அசோக் மல்கோத்திரா, அசோக் பட்டேல் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

### கல்வி சீராக இருக்கவே

## காலத்துக்குக் காலம் சீர்திருத்தங்கள்!

[மானிப்பாய்]

‘‘கல்வி சீராக இருக்கவேண்டும் என்பதற்காகவே கல்வித்துறையில் காலத்திற்குக் காலம் நல்ல சீர்திருத்தங்கள்கொண்டு வரப்படுகின்றன. புதிய புதிய அனுபவங்களை அன்றுட வாழ்க்கைக்குத் தேவையான அனுபவங்களை மாணவர்கள் நல்லமுறையில் பெற்றுக்கொள்ள ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையோடு உதவ முன்வரவேண்டும். அப்போது தான் பயனுள்ள கல்வியை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.’’

இவ்வாறு நான்காம் ஆண்டிற்கான மானிப்பாய் வட்டார ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ். இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது இதனை ஆரம்பித்துவைத்துப் பேசிய மானிப் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் தமது தலைமையுரையில் எடுத்துக் கூறினுர்.

சாவகச்சேரிவட்டாரக் கல்வி அதிகாரி திரு. எம். சோமசுந்தரம் பேசுகையில், ‘‘முடிவுகளைத் தாமாகவே மாணவர்கள் எடுப்பதற்கான அணுகுமுறை தேவையென்றும், மாணவர்கள் புதிய அனுபவங்களைப் பெறத் தூண்டப்படவேண்டும்’’ என்றும் எடுத்துக் கூறினுர்.

நான்கு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மொழி, ஆரம்பக்கணிதம், அழகியல், சுற்றாடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் முதலிய விஷயங்களில் விரிவுரைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணவட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தம் சங்கீத வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ், கணபதிப்பிள்ளை ஆசிரியர் திரு. எஸ். நாகராஜா ஆசிரியைகள் திருமதி பி பரமசாமி, செல்வி எஸ். பி சங்கரப்பிள்ளை ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினர்.

ஆசிரியர் திரு. க. கணேசலிங்கம் நன்றி கூறினுர்.

## கருத்தரங்கில் ‘ஈழநாடு’ பிரஸ்தாபம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் இடம் பெற்ற ‘‘சைவசமய பாதுகாப்பும், திருக்கோயில் புனிதத்துவமும்’’ என்பது பற்றிய கருத்தரங்கில் ‘ஈழநாடு’ பத்திரிகைக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

கருத்தரங்குக்கு தலைமை தாங்கிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், கருத்தரங்கில் உரையாற்றிய தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்கத் தலைவர் திரு. ஏ மூர்நாயகமும் இந்த பாராட்டைத் தெரிவித்தனர்.

துர்க்காதேவி ஆலய கொள்ளைச் சம்பவம் பற்றிய செய்திகளை சிறப்பான முறையில் வெளியிட்டும், சிறந்த ஆசிரியத் தலையங்கம் எழுதியும் கோயில் சொத்துக்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியமைக்காக ‘ஈழநாடு’ பத்திரிகையை பாராட்டுவதாக அவர்கள் தமது பேச்சில் குறிப்பிட்டனர்.

சமயத்தையும், சைவ ஆலயங்களையும் பாதுகாக்க ‘ஈழநாடு’ தொடர்ந்தும் பாடுபடுமென நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டது.

## நவாலியில் தொண்டர் பயிற்சிக்கு ஆட்கள் சேர்வு

(சுண்டுக்குளி)

நவாலி ஆரம்ப சுகாதார கவனிப்புக்குழுவினர் தொண்டர் பயிற்சிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு இளைஞர்களும் யுவதிகளும் பங்கு பற்றலாம் இதில் 17 அம்சக் கோரிக்கைகளும் போதிக்கப்படும். இதற்கு வடபிரதேச சுகாதார கல்வி அதிகாரி திரு. ஆ. வைத்தீஸ்வரன் தலைமை தாங்குவார். இப்பயிற்சி வகுப்பு இம் மாதம் 22-ம், 23-ம் திகதிகளில் நவாலி வை. எம். சி ஏ. மண்டபத்தில் நடைபெறும் இதற்கான விண்ணப்பப்படிவங்களை நவாலி ஆரம்ப சுகாதார குழுத்தலைவர் திரு. உ. ந தேவசகாட்சத் திடம் பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ். பஸ்நிலையத்தில் நேற்று

# இயந்திரத் துப்பாக்கியுடன் இளைஞர்கள் அட்டகாசம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். பஸ் நிலையத்தில் இயந்திரத் துப்பாக்கியுடன் அட்டகாசம் புரிந்த இரு இளைஞர் பொதுமக்கள் போட்ட கூச்சலைத்தொடர்ந்து அவ்விடத்திலிருந்து ஓடித்தப்பினர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8-30 மணியளவில் யாழ். பஸ் நிலையத்துக்கருகில் இடம்பெற்றது. இத்துப்பாக்கி இளைஞர்கள் புரிந்த அட்டகாசத்தினுல் யாழ். வைத்தியசாலை ஊழியர் ஜெயரட்ணம் [45 வயது] உட்பட இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

அந்த இரு பதினைந்து வயது மதிக்கத்தக்க இளைஞர்களும் கையில் இயந்திரத் துப்பாக்கியுடன் மினிபஸ்வண்டி ஒன்றைக் கடத்த முற்பட்டனராம். ஆனல் அதன்சாரதி பிடிவாதமாக இதற்கு இடங்கொடுக்கவில்லை, இதனுல் அவ்விடத்தில் 'அமர்க்களம் ஏற்படவே பொதுமக்களும் கூடிவிட்டனர். இதனையடுத்து அந்த இரு துப்பாக்கிப் இளைஞர்களும் அக் கூட்டத்தில் ருந்தும்விடுபட வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனுலேயே மூவர் சூடுபட்டுக் காயமடைந்தனராம்.

தொடர்ந்து அத்துப்பாக்கி இளைஞர் அருகில்நின்ற வேறொரு மினிபஸ் வண்டிக்குள் புகுந்தனர். அவ்வண்டியின் சாரதியான வயோதிபர் ஒருவரையும் வெளியே இழுத்துப் போட்டனர். இதனையடுத்து அவ் வண்டியிலிருந்த பெண்கள் கூக்குரலிடவே பொதுமக்களும் கூச்சலிட்டபடி அந்த மினிபஸ் வண்டியை நெருங்கினர். இதனைத் தொடர்ந்து அந்தஇருஇளைஞர்களும் தமது இயந்திரத் துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு தலைதெறிக்க ஓடிஞர்களாம். (கி)

WINDSOR
Now Showing
Daily 10-30, 2-00, 4-15
SATURN 3
Kirk Douglas, கர்க்டக்ளஸ் என்பரின் பிரமாதமான நடிப்பு, திகில், சூழ்ச்சிகள், மர்மம் நிறைந்த விண்வெளிக் கலப்பிரயாணம்.

யாழ். வின்சர் மினி
தினசரி 10-30, 2-15. 4- 5
நவீன பாணியில் அமைந்த குங்பூ கராட்டிச் சண்டைகள்நிறைந்த சித்திரம்.
"THE SHAOLIN DRUNKEN MONK"

ஆனந்தி வீடியோ சினிமா
[மனேகராவில்]
கமலஹாசன், ராதா, ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
ஒரு கைதியின் டயறி
[கலர்]

MANOHARA
Daily 10-30, 2-51, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
கமல்-ராதா-ரேவதி நடிக்கும்
பாக்கியராஜ் கதை வசனத்தில்
பாரதிராஜாவின்
ஒரு கைதியின் டயறி

றீகல்
தினசரி 10-30, 2-00
JUNGLE WARRIORS
(Full of Action-Adults)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

லிடோ சினிமா
10-30 am, 2-00 pm, 4-00 pm
"HAPPY HOKKER GOES HOLLYWOOD"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

## இலங்கை பிரயாணி திருச்சியில் கைது

(சென்னை)

திருச்சிராப்பள்ளி சுங்க இலாகா அதிகாரிகள் இலங்கையிலிருந்து திருச்சி விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணி ஒருவரை பரிசோதித்த பொழுது அவரது உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 264 விலையுயர்ந்த கற்களை கண்டெடுத்தனர்.

இவற்றின் பெறுமதி சுமார் அறுபதாயிரம் ரூபாவாகும். அந்தப்பயணி சுங்க இலாகா அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். (து)

## மூன்று

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏக்கர்காணியை இதற்குக் கொடுத்துதவினர். இந் நிலையில் சில வருடங்களுக்குமுன் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மறைந்த தனிநாயக அடிகள், முன்னுள் மேயர் திரு இராசா விசுவநாதன் ஆகியோரால் அத்திபாரமிடப்பட்டது. ஆனல் அக்காணி அண்மையில் சில இளைஞர்களால் "கைப்பற்றப்" பட்டுள்ளது அதனை நிலமற்றோருக்கு வழங்கப் போகிறார்களாம.

தமிழ்கலையை வளர்க்க ஒரு இசைக்கல்லூரி அமைக்க யாழ். இளங்கலைஞர் மன்றப் முன்வந்தது. ஆனல் அதற்குப் நிலம் கிடைக்கவில்லை. ஒ ஆலயம் உதவ முன்வந்தது கலாநிதி பாலமுரளி கிருஷ்ண இந்தியாவிலிருந்து வருகை தந்து அத்திபாரமிட்டார் அந்தக்காணியில் இருவாரங்களுக்குமுன் அத்துமீறிக்குடியேற்றமாம்.

யாழ்ப்பாணப் பட்டண எல்லைக்குள் காணி கிடையாது நிலமற்றோருக்குப் பதிய குடியேற்றங்கள் பட்டணஎல்லைக்கு வெளியேதான் ஏற்படுத்தப்படவேண்டும். பட்டண எல்லைக்குள் சில பொதுமக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய சில காணிகளை அரைப்பரப்பு முக்காற் பரப்பாகப் பங்கிடுவது மூலம் காணிப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது.

கோவில் நகை களவு, காணிகளில் அத்துமீறல் ஆகியவை இயக்கங்களின் பெயரைச் சொல்லி, "சட்டம் ஒழுங்கு" சீர்குலைந்துள்ள தற்போதைய நிலையை சிலர் சாதகமாக்கிக் கொள்ளப்பார்க்கிறார்கள்

உண்மை விடுதலை இயக்கங்கள் இவற்றில் சம்பந்தப்பட்டிருக்க முடியாது. இது உண்மையாயின் இயக்கங்கள் இதனைப் பகிரங்கப்படுத்துவதுடன் இச்சக்திகளை முறியடிக்க முன்வரவேண்டும்.

—சிவனடியான்

## நகைகள் அபகரிப்பு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள தண்ணீரூற்று என்ற இடத்தில் 4 வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன இனம் தெரியாத குழுவினர்கள் ஒவ்வொரு வீடுகளிலும் ரொக்கப்பணத்தையும் நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளார்கள் இக்கோஷ்டியினர் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பெண்கள் சிறுபிள்ளைகளின் நகைகளை அபகரித்து சென்றனர் சில வீடுகளில் இரும்புப் பெட்டிகளை அபகரித்துச் சென்றுள்ளார்கள்.

## உலக மக்களின்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

காலம் நோய்வாய்ப்பட்டிருந்தும் கூட தனது செயல்பாடுகள் மூலம் உலக மக்களின் நன்மதிப்பை பெறத்தவறவில்லை.

இவரின் மறைவு சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியும் சோவியத் மக்களும் உலக கம்யூனிஸ்ட் இயக்கமும் பெரும் இழப்பிற்கு உள்ளாகியுள்ளன கூட்டு அனுபவத்தில் சார்ந்து நின்று சமூக வளர்ச்சியின் தேவைகளை ஆர்வத்துடன் உணர்ந்து நின்று சோவியத் அரசின் வல்லமையை அதிகரிக்கச் செய்யவும் பாடுபட்ட தலைவருக்கு அகில உலகமுமே சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்கிறது.

## அந்தத்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

திருந்தால், திரு. ஆர் பாலசுப்பிரமணியம் (யாழ் பிரஜைகள் குழு) அவர்களின் ஐலண்ட பேட்டிக்கு அளித்த பதிலில் திரு. எஸ். எல். குணசேகர "1949-ல் Tamils/Sinhalese" Irreconcilable Units ஆனபடியால் Federalis என்று சமஷ்டி கோரவேண்டிய தேவை என்ன?' என்ற கேள்விக் கணையைக் கண்ட பின்பாவது தெரிந்திருக்கவேண்டும்.

அதன்பின்பும் தாங்கள் பெரும்பான்மையிடத்தில் குற்றத்தைச் சுமத்தி வக்கரிப்பதை விட

| | | |
|---|---|---|
| சமஷ்டியினரை | 41 | %மும் |
| எஸ்.எல்.எவ்.பியினரை | 40 | " |
| யு. என். பி யை | 15 | " |
| சிவப்புகொடியினரை | 04 | " |
| | 100 | |

100 குற்றம் காணுவதே மேலாகும். தமிழினத்துக்கு விடிவு காலமுமாகும். தமிழ்ச் சாதி நல்லாய் வாழவேண்டுமெஸற ஜீ ஜீ யின் கனவு நனவாகும்.

ஜே. ரி. தவம்,
236, ஆஸ்பத்திரி விதி,
யாழ்ப்பாணம்.

## உலக

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துடைக்கும் மகத்தான கம்யூனிஸ சித்தாந்தத்தை உலகுக்குத் தந்து அரசியல் பொருளாதாரச் சிந்தனையில் புரட்சியை ஏற்படுத்திய கார்ல் மார்க்ஸின் வழியிலேயே பாட்டாளி வர்க்கப் பேரியக்கம், தேசிய விடுதலை இயக்கம். உலகசோஷலிஸமுகாம் போன்றன இயங்கிவருகின்றன.

சாதி, மத பேதங்களைக் கடந்து உலகின் பாட்டாளி வர்க்கத்தை ஒன்றுதிரட்டி ஏகாதிபத்திய இருளின் விடியலுக்காகக் குரல்கொடுத்து. 1883ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி லண்டனில் காலமான கார்ல் மாக்ஸ் மனித வரலாற்றில் ஒரு சகாப்தத்தின் ஆரம்பம்.

## விதை நெல் வழங்க முடியாதநிலை

(வண்ணார்பண்ணை)

விவசாயத்திணைக்கள வாகனங்களைப் பாவிக்க முடியாததால் விவசாயிகளுக்கு விதை நெல் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தமக்குத் தேவையான விதை நெல்லை விவசாயிகளே தேடிக் கொள்ள வேண்டுமென கிளிநொச்சிப்பகுதி விவசாய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விதை நெல் பெறுவதற்கு விவசாயப் பகுதியை நம்பியிருந்த வடபகுதியின் கஷ்டப்பட்ட விவசாயிகள் இதனுல் பாதிப்படைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## இந்துமதகுருமார் கோரிக்கை

# "ஆலயங்களில் அமைதிநிலவ பிரார்த்தனைசெய்க"

[ஊர்காவற்றுறை]

துயரம் தரும் நிகழ்ச்சிகளால் சீர்குலைந்துவரும் சைவாலயங்களில் அமைதிநிலவ வேண்டிப் பிரார்த்தனையும் விசேட பூசையும், வழிபாடும், மௌனத்தவமும் ஏற்பாடு செய்யுமாறு தீவுப்பகுதி இந்து மதகுருமார் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆலயங்கள் அழிக்கப்படல், சூறையாடப்படல், விலைமதிப்பற்ற பொருட்கள் கொள்ளையிடப்படல் குருமார் கோவில் நிர்வாகிகள் கைது செய்யப்படல் போன்றவை நிறுத்தப்படவேண்டுமென்றும் மன்றம் கோரியுள்ளது.

இது தொடர்பாக இந்து மத குருமார் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

"தமிழ் மக்கள் இன்னல் உற்றுக்கொண்டுவரும் இன்றைய சூழ்நிலையிலே அம்மக்களுக்கு அமைதியையும் ஆத்ம சாந்தியையும் மனநிம்மதியையும் கொடுத்துக்கொண்டுஇருப்பவை ஆலயங்களும் அங்குள்ள தெய்வங்களுமே

"இப்படித் தமிழ்மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த ஆலயங்களைச் சேதப்படுத்துவதும், அவ்வாலயங்களுக்குரிய பெறுமதி வாய்ந்த பொருள்களைச் சூறையாடுவதும், மதகுருமார்கள் தாக்கப்படுவதும், கைதுசெய்யட்படுவதும் ஆலய நிர்வாகிகள் தாக்கப்படுவதும் தமிழ் மக்களின் இன்னல்களை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

"இப்படியான துர் அதிஷ்டவசமான செயல்கள் மேன்மேலும் நடைபெறுவண்ணம் நாளை வெள்ளிக்கிழமை சகல இந்து ஆலயங்களிலும் விசேஷ பூஜையும் பூஜைமுடிவில் 10 நிமிட மௌனப் பிரார்த்தனையும் செய்து இறைவனின் இன்னருளை வேண்டுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்."

## ஆயிரத்தில் ஒருவர் இவர்——

# ஒய்வுபெறும் ஆசிரியமணி

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் சிரேஷ்ட முதுமானிப் பட்டதாரி ஆசிரியரும் கல்லூரியின் இந்து மாமன்ற போஷகருமான திரு.எஸ். குமாசாமி எம் ஏ. இம்மாதம் முதல் தமது ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிச் செல்கிறார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுகிய திரு. குமாரசாமி யா/மத்திய கல்லூரியிலிருந்து இலங்கை பல்கலைக் கழகத்திற்கு சென்று விஞ்ஞானத்துறைக் கல்வியை பயன்றவர். சிறிது காலம் அரசாங்க சேவையில் ஈடுபட்ட திரு. குமாரசாமி அவர்கள் மீண்டும் உயர் கல்விபெற தமிழ்நாட்டிற்குச் சென்றார். அங்கு புதுக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பயின்ற பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தத்துவஞானத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். அக்காலையில் அங்கு தத்துவத் துறைப் பேராசிரியர்களாகத் திகழ்ந்த கலாநிதி கிருஷ்ணமாச்சாரியார், கலாநிதி ஆதி நாராயணன் போன்றவர்களின் அளப்பரிய அன்பையும் மதிப்பையும் ஈட்டிக்கொண்டார். அங்கு பல கருத்தரங்குகளில் கலந்துகொண்ட ஆசிரியர் அவர்கள் அனைவரது பாராட்டுதலையும் பெற்றவர்.

சங்கீதத் துறையில் மிகவும் ஈடுபாடுடைய திருவாளர் குமாரசுவாமி கல்லூரியின் காலைப்பிரார்த்தனைகளை ஒழுங்குசெய்து வெள்ளிக்கிழமைதோறும் நற்சிந்தனைச் சொற்பொழிவுகளையும், நவராத்திரி, சரஸ்வதி பூசை போன்ற விழாக்களையும் விமரிசையாக நடாத்தி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் அயராது உழைத்த உத்தமர் புல்லாங்குழல் போன்ற வாத்தியக் கருவிகளை வசித்து இசை மழை பொழிவதில் மிகவும் ஆற்றல் படைத்தவர் முன்னர் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் அநுராதபுரம் விவேகானந்தாவிலும் சிறந்த ஆசிரியப் பணி புரிந்தவர்.

26-02-1985 (செவ்வாய்) மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர் குழாமும், ஆசிரியர் கழகமும் திருவாளர் எஸ். குமாரசாமி அவர்களுடைய சேவையைப் பாராட்டிப் பரிசில் வழங்கி மலர்மாலை அணிவித்து பிரிவுபசார விருந்தினை நடாத்தி மகிழ்ந்தனர் ஆசிரியமணி சைவத் திருத் தொண்டு செய்து நீடூழி காலம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டுமென அனைவரும் வாழ்த்தினர்.

எஸ். வி. மஹேசவேலு,
(அதிபர்)

## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துசெய்யுமாறு

# தமிழ்நாடு சட்டசபை தீர்மானத்துக்குத் தயார்!

(சென்னை)

கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய ஒப்பந்தத்தை ரத்துச்செய்யக்கோரி தமிழ்நாடு சட்டப் பேரவையில் தீர்மானம்கொண்டுவர தமிழக அரசு தயாராகவுள்ளதாகசபைமுதல்வரும், நிதியமைச்சருமான திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதததின்போது தி. மு. க. சட்டப்பேரவைத் தலைவர் திரு. கே. அன்பழகன் இப்பிரச்னை சம்பந்தமாக விளக்கம் கேட்டபோதே அமைச்சர் நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் கச்சதீவு சம்பந்தப்பட்ட விடயம் முக்கிய பங்கு வகிக்கிறதென்றும் கூறிய அமைச்சர் திரு. நெடுஞ்செழியன், இதுவிடயத்தில் சர்வகட்சிக் கூட்டத்தில் விவாதிதது, கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரி சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரத்தயார் என்றார்.

## கொழும்பு—தூத்துக்குடிகப்பல்சேவை

# அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

கொழும்புக்கும் - தூத்துக்குடிக்கும இடையில் புதிய கப்பல்சேவை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இந்தியாவுக்கு திரும்பிச்செல்வதற்காக இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்காகவே இந்தப் புதிய சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

இருநாட்களுக்கு ஒருமுறை சுமார் இரண்டாயிரம் பேரை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பலொன்றை இலங்கை கப்பல் போக்குவரத்து நிறுவனம் வாடகைக்குஅமர்த்தவுள்ளது.

இதேவேளை இந்திய கடவுச்சீட்டுகளை வைத்திருக்கும் சுமார் ஒரு லட்சம் பேர் இந்தியா அனுப்பப்படவுள்ளார்கள் என்றும் போக்கு வரத்து வசதி இல்லாமையின் நிமித்தமே இதுவரை அவர்கள் இந்தியா செல்லமுடியாதுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ரா)

## சிமியாம்பிள்ளை நன்றி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற க. பொ. த (சாதாரணம்) விசேஷ பரீட்சை ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற்றதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும், யாழ். மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளை பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார். (மா)

## அ'புரம்வரை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மறுஅறிவித்தல்வரை வடபகுதிக்கான ரயில் சேவை அனுராதபுரம்வரையே நடைபெறுமென்றும் தெரியவருகிறது. [மா]

## பஸ் கட்டணம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளமூன்றுபேர்கொண்ட குழு கட்டண உயர்வுக்கு சிபார்சு செய்திருப்பதாக தெரிகிறது (இ)

## கலகலப்பின்றி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கமாக அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் அமைச்சர் நேற்று முடிவுகளை அறிவித்தபின்னர் எழுந்து சென்றுவிட்டார்.

## தொண்டா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்தியா வழங்கும் சிறுநிவாரணத்தைப் பெறுவதற்காக வீடு வாசல்களை விட்டு ஓடிவருவார்களா?

''வவனியாவுக்கும் ஆனையிறவுக்குமிடையே 2 லட்சம் சிங்களவர்களை குடியமர்த்தப் போவதாக திரு. அத்துலத்முதலி மீண்டும் கூறியிருக்கிறார் இதற்கு வசதிசெய்யுமுகமாகவே ஆயுதப்படையினர் மக்களைத் துன்புறுத்தி வெளியேற்றி வருகின்றனர் போல் தெரிகிறது.

''தீவிரவாதிகள் தமதுநடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் அரசு ராணுவநடவடிக்கைகளை நிறுத்தாது என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பது வடக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நியாயப் படுத்துவதாக இல்லை என்றே நான் நம்புகிறேன்''. (இ)

## யாழ். நகரில் வாலிபர் யுவதிகள் நீண்ட 'கியூவில்'

[கல்வியங்காடு]

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு நூற்றுக்கணக்கான வாலிபர், யுவதிகள் படையெடுத்துச்சென்றனர்.

வீரசிங்கம் மண்டபத்தில் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிப்பதே வாலிபர் படையெடுத்துச்செல்லக் காரணமாகும். விண்ணப்பப்படிவம் ஒன்று ஒரு ரூபாவாக விற்கப்படுகிறது இத்துடன் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய கல்வி சம்பந்தமானபுள்ளிமதிப்பீடுகளும் விநியோகிக்கப்படுகின்றன. நீண்ட கியூவில் நின்று பத்திரங்களை வாலிபர் பெற்றனர்.

## வேலைவங்கிப் படிவங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வேலைவங்கிப் படிவங்கள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் சகல உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் வழங்படவுள்ளது

இன்றைய சூழ்நிலையில் இரு மாவட்டங்களிலும் வேலையற்றிருக்கும் இளைஞர்களின் தொகை வேலைவங்கிப் படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டபின்னர் தெரியவரும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## வழக்காளி வரவில்லை

(யாழ்ப்பாணம்)

காணிக்குள் அத்துமீறிக் குடியேறியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், வழக்காளியும் சாட்சிகளும் வராததினால் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். பதில் நீதவான் கே. வி. எஸ். சண்முகநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பா தவபாலன், வழக்காளியும் சாட்சிகளும், கடந்த பல தவணைகளாக வரவில்லை என்றும், எதிரிகள் ஏழைக்குடும்பங்களை சேர்ந்தவர்களென்றும் அவர்கள் அத்துமீறிக் குடியேறவில்லையென்றும், நீண்டகாலமாக வசித்து வருவதாகவும், வழக்காளி வராததினால், வழக்கைத்தள்ளுபடிசெய்யுமாறு கோரினார்.

யாழ். பதில் நீதவான் வழக்கைத்தள்ளுபடி செய்தார் (க)

## மல்லாகம் நீதிமன்றம்

[யாழ்ப்பாணம்]

சங்கானை ஆரம்ப நீதிமன்றமும், மல்லாகம் மாவட்ட நீதிமன்றமும் ஒழுங்காக நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நீதிமன்றங்கள் இயங்காத நிலையில் இருப்பதாக நேற்று 'ஈழநாடு'வில் வெளிவந்த செய்தி தவறெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். நீதிமன்றத்திற்கு

# பொலிஸார் வராததினால் எதிரி விடுதலை!

(யாழ்ப்பாணம்)

தபால் பையை அனுமதியின்றி வைத்திருந்ததாகக்குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றத்திற்கு பொலிஸார்வராததினால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். பதில் நீதவான் கே. வி எஸ். சண்முகநாதன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், இவ்வழக்கு பல தடவை தவணைபோடப்பட்டதாகவும், பொலிஸார் வராததினால்எதிரியை விடுதலைசெய்யுமாறும் கோரினார்.

பதில் நீதவான் எதிரியை விடுதலைசெய்தார். [ச]

## மல்லாகம் மயானத்தில்

# மூன்று சடலங்கள்!

[யாழ்ப்பாணம்]

மல்லாகத்திலுள்ள மயானம் ஒன்றில் எரிந்து கருகிய நிலையில் மூன்று சடலங்கள் நேற்றுக்காலை காணப்பட்டன.

மூன்று சடலங்களும் ஒரே வரிசையாகக் கிடக்கக்காணப்பட்டன.

இருவரது சடலங்கள் இளைஞர்களாயிருக்கலாமென்றும் மற்றது நடுத்தரவயதுடையவராயிருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

மல்லாகம் நீதிமன்றத்துக்கு அண்மையிலுள்ள மயானம் ஒன்றிலேயே இச்சடலங்கள் கிடந்தன. (மா)

## எரிந்த நிலையில் மோ. சைக்கிள்!

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிச் சந்தைக்கு அண்மையில் நேற்றுக் காலை கசிப்பு பரலுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எதிரே வந்துகொண்டிருந்த வாகனங்களைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை விட்டு தப்பி ஓடினராம்.

அந்த வாகனங்கள் அவ்விடத்தைவிட்டுச் சென்ற பின்னர் மோட்டார் சைக்கிள் எரிந்த நிலையில் காணப்பட்டது.

இதேவேளை கோண்டாவில் பஸ்டிப்போமுன்னால் மோட்டார் சைக்கிளில்வந்துகொண்டிருந்த இருவரை துரத்திச் சென்றபொழுது இருவரும் மோட்டார்சைக்கிளுடன் தலைமறைவாகிவிட்டதாகவும் அச்சமயம் டிப்போமுன்னால் உள்ள தேநீர்க்கடையின் மதில்சுவருடன் கனரக வாகனம் மோதியதால் மதில் உடைந்கதுடன் மரமென்றும் முறிந்து வீழ்ந்ததாகவும் தொடர்ந்து துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## திருமலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

திருமலையில் சுதந்திரவர்த்தகவலயம் அடைக்கப்படவுள்ளதால் அங்கு விமானநிலையம் அமைப்பது முக்கியம் என ஜனாதிபதி கருதுவதாகவும் அமைச்சர் கூறினார். (ரா)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி டாக்டர் ஜி. எஸ். தில்லான் 83ம் ஆண்டிலிருந்து இதுவரை 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் வந்திருக்கின்றனர் என்ற கருத்துக்கு இலங்கைப் பிரதிநிதி எச். டபிள்யு. ஜெயவர்த்தன மறுப்புத் தெரிவித்தார்.

அந்தக் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்துப் பேசிய டாக்டர் தில்லான், கடந்த மாதத்திலிருந்து இதுவரை 15 ஆயிரத்துக்குமதிகமானோர் வந்திருப்பதாக கூறினார்.

தமிழர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை இந்தியா கண்டிப்பதாகவும் டாக்டர் தில்லான் கூறினார்.

## மதவாச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவங்களைத் தொடர்ந்து மதவாச்சியில் நேற்று பதற்றம் நிலவியது. மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படவில்லை.

ரயில் சேவைகள் அனைத்தும் அனுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டன. நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த சில தனியார் பஸ்கள் பல்வேறு சிரமங்களுக்கிடையே கொழும்பு வந்து சேர்ந்தன.

இந்தச் சம்பவங்களால் பலர் காயமடைந்திருப்பதாக மட்டுமே அறிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் தன்னியக்கத் துப்பாக்கி கொண்டு பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதாகவும் பாதுகாபபுப்படையினர் திருப்பித்தாக்கியதும் அவர்கள் தப்பி ஓடிவிட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. வெடிகுண்டுகள் வாக்கிடோக்கி, வெடிமருந்துகள் மீட்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் மீனுச்சிப்பிள்ளை

மூளாய் திருமதி மயில்வாகனம் மீனுச்சிப்பிள்ளை அவர்கள் 12-3-85 செவ்வாய்க்கிழமை சிவகதி எய்தினார் இவர் இளைப்பாறிய அதிபர் திரு சி மயில்வாகனம் J P அவர்களின் அன்பு மனைவியும் திரு. குமாரராசர் இரசாயன ஆராய்ச்சியாளர் கொழும்பு, திரு. முருகசோதிராசர் மாவட்டதொலைத் தொடர்பு பரிசோதகர் யாழ்ப்பாணம், திருமதி ஸ்ரீராஜராஜேஸ்வரி தேவி தாமோதரம்பிள்ளை, திருமதி சிவராஜலச்சுமி தேவி சிவதாசன், சின்னப்பு ராசர் கணக்காளர் சிங்கப்பூர், செல்விகள்- சிவபாக்கிய லச்சுமிதேவி, சிவானந்தலச்சுமிதேவி, சிவஞ்சோதிலச்சுமிதேவி, சிவயோகலச்சுமிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும். திரு. இ தாமோதரம்பிள்ளை, உடுப்பிட்டி திரு ச. சிவதாசன், உபதபால் அதிபர் தெல்லிப்பளை மேற்கு திருமதி. மகேந்திரராணி குமாரராசர், கருவம்பானை, திருமதி சீதாலச்சுமி முருகசோதிராசர், சுன்னுகம் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்விகள். அனுரதி, சிவநாராயினி, ராதிக்கா, சிவரஞ்சனி, ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அமரர் செல்லையா ஆச்சிமுத்து திருவாளர்கள், க. பேரம்பலம் (அமரர்) P. M. C. சிற்றம்பலம் B S C திருமதி. வள்ளிப்பிள்ளை பெருமயினர், ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மூளாய் பித்தனை மயானத்தில் 14-3-85 வியாழன் நண்பகல் நடைபெறும். நண்பர் உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும். (2273)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஆதாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka unde Reelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126